என் தொகுதிக்குட்பட்ட ஆணைக்கட்டி மலைப் பகுதியிலே ஆவினுக்குச் சொந்தமான 22 ஏக்கர் நிலமுள்ளது. அந்த நிலத்தை மலைவாழ் மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே, சுய உதவிக் குழுவிடம் ஒப்படைத்து, அதன்மூலமாக ஆதிவாசிப் பெண்களுக்கு கால்நடைகள்–பசுக்களை வழங்கி, மேய்ச்சல் நிலத்திலே தீவனப் பயிர்களை உற்பத்தி செய்து, அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சங்கம் பதிவு செய்யப்படவில்லை என்பதையும், சம்பந்தப்பட்ட சங்கம் பதிவு செய்யப்படும்பட்சத்தில், நிச்சயமாக நீங்கள் கேட்டுக்கொண்டபடி, உரிய ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைர் தலைவர்: *வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

119—

நூலகம்

***10155—திரு. இ. பரந்தாமன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எழும்பூர் தொகுதி, மோதிலால் தெரு பகுதியில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கி, தங்கள் அனுமதியுடன் விடையளிக்கிறேன்.*

2022 ஏப்ரல் 18]

நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். சென்னை மாவட்டம், எழும்பூர் தொகுதி, மோதிலால் தெரு பகுதியில் பகுதிநேர நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நூலகம் அமைக்க வழிவகையில்லை என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன் அவர்கள்.

திரு. இ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. அதே எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில், 77-வது வார்டில் Demellows road-ல் பகுதிநேர நூலகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனை முழுநேர நூலகமாக அமைத்துத் தரும்படி மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தப் பகுதிக்கு இன்றைக்கே District Library officer-ஐ அனுப்பி, முழுநேர நூலகமாக மாற்ற சாத்தியக்கூறுகள் இருக்கும்பட்சத்தில் கண்டிப்பாக அங்கே அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே எழும்பூர் தொகுதியைப் பொறுத்தவரை, கிட்டத்தட்ட 6 கிளை நூலகங்கள் இருக்கின்றன. கெங்கு பிள்ளை தெரு, அருணாச்சலம் தெரு, சுந்தரம் பிள்ளை தெரு, நேரு பூங்கா, சொக்கவேல் சுப்பிரமணி தெரு, பக்தவத்சலம் பூங்கா எனக் கிட்டத்தட்ட 2 கிலோ மீட்டர் radius-க்குட்பட்ட பகுதிகளில் ஆறு கிளை நூலகங்கள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் நூலகம் அமைக்க வேண்டுமென்றால், அரசாங்கம் விதித்திருக்கின்ற விதிகளுக்குட்பட்டு வரும்பொழுது, நூலகம் செயல்படுவதற்கு வாடகை இல்லாத இலவசக் கட்டடத்தை நூலக ஆணையக் குழுவிற்கு வழங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

முற்பகல் 10—55

அதுமட்டுமல்லாமல், எதிர்காலத்தில் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமென்றால், 5 சென்ட் நிலத்தை இலவசமாக பத்திரப் பதிவு செய்து, நூலக ஆணையக் குழுவிற்கு வழங்கவேண்டிய கட்டாயமும் இருக்கிறது. அதேபோல, புரவலர்களாக இரண்டு நபர்கள் ரூ.1,000/– செலுத்தி, பதிவு செய்யப்பட வேண்டும்; அதேபோன்று, உறுப்பினர் தொகை ரூ.20/–ம், ஆண்டுச் சந்தா ரூ.10/–ம் செலுத்திய 200 உறுப்பினர்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். அதோடுமட்டுமல்லாமல், basic furniture *என்ற வகையில் ரூ.2,000/–க்கான தளவாடப் பொருட்கள் அமையப்பெற்றிருத்தல் வேண்டும். இதுபோன்ற விதிமுறைகளுக்குட்பட்டு வந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பகுதியில் நூலகம் அமைப்பதற்கான அனுமதியைக் கண்டிப்பாக நம்முடைய அரசாங்கம் வழங்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன் அவர்கள்.*

திரு. இ. பரந்தாமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்காலத்தில் அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு கிளை நூலகம் அமைத்துத் தரப்படும் என்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

120—

உடற்பயிற்சிக் கூடம்

*12063—திருமதி ம. வரலட்சுமி:

மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—